செ.கு.எண்: 97 நாள்: 7/08/2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 7 .8.2011

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், சேரங்கோடு கிராமம், சிங்கோனா என்ற இடத்தில் திரு. அப்துல் மஜித் என்பவரின் மகன் திரு. பாபு காட்டு யானை தாக்கியதால், 5.8.2011 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

திரு. பாபு என்பவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாயும், ஆக மொத்தம் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க நான் ஆணையிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9